


Our Chezhumai is given to the Small Groups in bilingual format (English and Tamil)

எங்களது செழுமை மாத இதழ் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறுகுழுக்களுக்கு கொடுக்கப்படுகிறது



**Visit of Mr.Premkumar, Director, Sustainability, Cognizant Technology Solutions to audit their 100,000 trees. Article on his visit with pictures will feature in Chezhumai March 2012 issue**

## Best practices to be learnt from this month Chezhumai:

1. News to new small groups
2. How to keep ground wet always?
3. Nameplate for all groves
4. Node meeting
5. Maintaining log note book
6. Benefits of vermiculture

## இம்மாத செழுமையின் மூலம் கற்றுக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய பயிற்சி முறைகள்:

1. புதிய சிறு குழுக்களுக்கான செய்தி
2. நிலத்தின் ஈரத்தன்மையை எவ்வாறு நிலைநிறுத்தலாம் ?
3. தோப்பிற்கு பெயர்பலகை அமைத்தல்
4. நோடு கூட்டம்
5. குறிப்பேடு பராமரித்தல் (லாக் புக்)
6. வெர்மிகல்சரின் பயன்கள்

**TIST Tree Planting India Private Limited**
Flat A, Plot No.69, Sankara Nagar, 26th Street
Pammal, Chennai 600075. Mobile: 9840299822
Email: josephrexon@tist.org / Visit us at www.tist.org

## News to new Small Groups

1. All the new Small Groups who were registered during the last three months should immediately sign the GHG agreement. During the Node meeting contact your TIST Officer and get your GHG agreement form. Minimum four members from a Small Group should sign the GHG agreement. More important is that, read the GHG agreement and understand the information given in the agreement.
2. Every new Small Groups should get their SGMR book from the TIST Officer immediately. This book has empty SGMR forms for five years and in the first sheet, fill in all the details of your Small Group and get it signed by the TIST Officer. This book should be kept safely; the same should be brought to the Node without fail.
3. All the new Small Groups should immediately open a bank account on their group name. The following should be done to open an account:

- ☞ Identify two authorized signatories for your Group.
- ☞ Get three passport size photographs of both the authorized signatories
- ☞ Keep your SGMR book ready with all the required data's filled in the first page
- ☞ Get an introduction letter from TIST India

Once you have all the above four, contact your TIST Officer, they will guide and educate you to open your account. After opening an account, in the following Node meeting, mention your bank account number in the SGMR without fail.

## புதிய சிறு குழுக்களுக்கான செய்தி

1. கடந்த மூன்று மாதங்களில் பதிவு செய்யப்பட்ட சிறுக் குழுக்கள் அனைத்தும் உடனடியாக ஜிஎச்ஜி (GHG) உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும். "நோடு" கூட்டத்தின்பொழுது டிஐஎஸ்டி அலுவலரை சந்தித்து ஜிஎச்ஜி உடன்படிக்கைக்கான விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளவும். ஒவ்வொரு சிறுகுழுவிலிருந்தும் குறைந்தது நான்கு அங்கத்தினர் ஜிஎச்ஜி உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும். உடன்படிக்கைக்கான படிவத்தை நன்றாக படித்து அதில் கூறப்பட்டுள்ள செய்தியை புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.
2. ஒவ்வொரு புதிய சிறுகுழுக்களும் தங்களின் எஸ்.ஜி.எம்.ஆர் புத்தகத்தை டிஐஎஸ்டி அலுவலரிடமிருந்து உடனே பெற்றுக்கொள்ள வேண்டும். இப்புத்தகத்தில் ஐந்து வருடத்திற்கான பூர்த்தி செய்யப்படாத எஸ்.ஜி.எம்.ஆர் படிவங்கள் உள்ளது. அதில் முதல் பக்கத்தில் உங்கள் சிறு குழுவின் விவரங்களை பூர்த்தி செய்து டிஐஎஸ்டி அலுவலரின் கையொப்பத்தை பெற்றுக்கொள்ளவும். இப்புத்தகத்தை பத்திரமாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு "நோடு" கூட்டத்திற்கும் தவறாமல் எடுத்துவர வேண்டும்.
3. எல்லா புதிய சிறுக்குழுக்களும் வங்கியில் தங்கள் குழுவின் பெயரில் சேமிப்பு கணக்கை உடனடியாக தொடங்க வேண்டும். வங்கயில் சேமிப்பு கணக்கு துவங்க, கீழ்குறிப்பிட்டவைகளை செய்ய வேண்டும்.

- ☞ உங்கள் குழுவிற்கு இரண்டு அங்கீகரிக்கப்பட்ட கையொ–ப்பத்தாரர்களை தேர்வு செய்யவும்.
- ☞ கையொப்பத்தாரர்களின் மூன்று புகைப்படங்களை பெற்றுக்கொள்ளவும்.
- ☞ உங்களின் எஸ்ஜிஎம்ஆர் புத்தகத்தின் முதல் பக்கத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை பூர்த்தி செய்து தயாராக வைத்துக்கொள்ளவும்.
- ☞ டிஐஸ்டி–இந்தியாவிடமிருந்து அறிமுக கடிதம் பெற்றுக்கொள்ளவும்.

மேற்குறிப்பட்ட நான்கையும் பெற்றுக் கொண்ட பின்னர், உங்களின் டிஐஎஸ்டி அலுவலரை சந்தித்தால், அவர்கள் உங்களை வழி நடத்தி வங்கி கணக்கு துவங்க உதவுவார்கள். கணக்கு தொடங்கிய பின்னர் எஸ்ஜிஎம்ஆரில் உங்களின் சேமிப்பு கணக்கு எண்னை (நம்பர்) "நோடு" கூட்டத்தின்பொழுது பூர்த்தி செய்யவும்.

## How to Keep the Ground Wet Always?

To keep the ground surrounding the tree wet round the clock, use the coconut fiber. Coconut fiber is very thick and it will not allow the direct sunlight to fall on the ground at the same time it blocks the heat wave to enter the ground. When the heat wave and the direct sunlight are blocked, then it is sure that the ground in that area will always be wet when compared to the other open land. If this method of using the coconut fiber is followed along with the drip irrigation, then it is sure that all the members can do wonders in their tree planting work. There will not be any causality even during peak summer.

## நிலத்தின் ஈரத்தன்மையை எவ்வாறு நிலைநிறுத்தலாம் ?

மரங்களை சுற்றியுள்ள நிலமானது எந்நேரமும் ஈரத்தன்மையுடன் இருக்க தென்னை நாரை பயன்படுத்தலாம். இந்த நார் மிகவும் அடர்த்தியாக உள்ளதால் சூரியனின் வெப்ப கதிர்கள் நேராக நிலத்தில் விழுவதை தவிர்த்து, வெப்ப அலைகள் நிலத்தில் ஊடுறுவதையும் தவிர்கிறது. இதனால் நிலம் காய்ந்து போகாமல் ஈரத்தன்மையுடன் இருக்கிறது. ஆனால் வெற்று நிலமாக இருந்தால் சூரிய வெப்பமானது ஈரத்தன்மையை வற்ற செய்துவிடும். சொட்டு நீர் பாசன முறை மற்றும் தென்னை நாரை பயன்படுத்துவதின் மூலமாக குழுவினர் தங்களின் மரங்களின் வளர்ச்சியில் அதிசியங்களை காணலாம். உச்சகட்ட காலத்திலும் வெப்பத்தால் எந்தவித சேதமும் இருக்காது.







## Nameplate for Groves

TIST has been emphasizing to place a nameplate for every grove. The TIST Quantifier takes the photograph of every grove immediately after finishing the quantification. This photograph is taken through the palm top through which grove data is collected, so that, the photographs may also gets synced and stored along with the grove data in the TIST Web Site.

## தோப்பிற்கு பெயர்பலகை அமைத்தல்

ஒவ்வொரு தோப்பிற்கும் ஒரு பெயர்பலகை நிறுவ TIST அறிவுறுத்துகிறது. TISTயின் ஆய்வுக் குழு தோப்பை திறனாய்வு செய்தவுடன் அவற்றை புகைப்படம் எடுத்துக் கொள்கிறது. பாமடாப் கணிப்பொறி மூலம் படம்பிடித்து, தோப்பில் விவரங்களையும் சேகரித்து வெப்சைட்டில் பதியவைத்து கொள்கிறது.

## Node Meeting

Node meeting is the backbone of our project. Every Small Group should take-up this meeting sincerely. The following should be adhered without fail:

1. Minimum two members from a Small Group should attend the Node meeting
2. There should be minimum one women member from every Small Group during the Node meeting
3. SGMR should not be filled during the Node. It should be done during the Small Groups internal meeting
4. Submit your SGMR without fail
5. Come forward and learn how to enter your SGMR details in the palmtop
6. Attend the Node meeting in time
7. Be attentive during the Node and get your queries cleared then and there.

## "நோடு" கூட்டம்

நம் திட்டத்தின் முதுகெலும்பு"நோடு" கூட்டமே. ஒவ்வொரு சிறுகுழுவும் "நோடு" கூட்டத்டதை மிகவும் முக்கியமாக கருதவேண்டும். கீழ் கொடுக்கப்பட்டவைகளை கட்டாயமாக கடைபிடிக்கவேண்டும்.

1. குறைந்தது இரண்டு அங்கத்தினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
2. "நோடு" கூட்டத்தில் தவறாமல் ஒரு பெண் அங்கத்தினர் கலந்து கொள்ள வேண்டும்.
3. "நோடு" சமயத்தில் எஸ்ஜிஎம்ஆர் பூர்த்தி செய்யக்கூடாது. சிறு குழுக்களின் கூட்டத்தின் போது பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
4. எஸ்ஜிஎம்ஆர் தவறாமல் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
5. நீங்களே முன் வந்து பாம்டாப் (கணிணி) மூலம் எவ்வாறு எஸ்ஜிஎம்ஆர் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை கற்றுக்கொள்ளவும்.
6. நேரத்தோடு "நோடு" கூட்டத்தில் கலந்து கொள்ளவும்.
7. கூட்டத்தில் கவனத்தோடு செயல்பட்டு உங்களின் சந்தேகங்களை கேட்டு தெரிந்துகொள்ளவும்.

## Log Book Maintenance

Every Small Group should maintain a Log Book, wherein they should maintain all their details pertaining to TIST activities, like each families tree/seedling/grove details should be made a record on weekly / monthly basis. Minutes of their Small Groups meeting should be recorded. The Log Book should be brought to the Node Meeting along with their SGMR.

## குறிப்பேடு பராமரித்தல் (லாக் புக்)

ஒவ்வொரு சிறு குழுவும் குறிப்பு புத்தகம் ஒன்றை பயன்படுத்தவேண்டும். அதில் டிஐ.எஸ்டி தொடர்புடைய எல்லா விவரங்களையும் குறித்து வைக்க வேண்டும். மரங்களின் இன வகைகள், விதைநாற்றுகள், தோப்புகளின் விவரம் போன்றவை வாராந்திர அல்லது மாதாந்திர அடிப்படையில் குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும். சிறு குழுக்களின் கூட்டத்தில் எடுக்கும் முடிவுகள் மற்றும் ஆலோசனைகளையும் குறித்துகொள்ள–வேண்டும். நோடு கூட்டத்தில் கலந்து கொள்ள வரும்பொழுது எஸ்ஜிஎம்ஆர் (SGMR) மற்றும் குறிப்பேடு (லாக் புக்) இவற்றை தவறாமல் எடுத்துவர வேண்டும்.

## Benefits of Vermiculture

The earthworms play a vital role in the entire process; in ploughing and fertilizing the soil and providing all the needed nutrition to the plants. The earthworms have contributed to improve the soil structure, soil fertility, promote soil aggregation, encourage favorable soil reactions and enrich the nutrient status of the soil and in the process promoting the plant growth and improving the quality of the produce. Earthworms churn the soil and make it porous. They improve the soil by helping it achieve proper air, water and solids in the required ratio for maximum plant growth. Earthworms improve the water infiltration rate. Its maze of tunnels increases the soil's ability to absorb water. Earthworms bring up minerals and make plant nutrients more available. Earthworms also neutralize soil pH. Analysis of earthworm castings or manure shows that the soil in the castings has neutral pH (7) regardless of whether the existing soil is above or below pH (7). Earthworms compost plant residues. Earthworms stimulate microbial population. Free-living nitrogen fixing bacteria are more numerous around the sides of the earthworm's burrows.

## வெர்மிகல்சரின் பயன்கள்

இந்த உரத்தில் முக்கிய பங்கு வகிப்பவை மண்புழுக்கள் நிலத்தை உழுதல் பயிர்களுக்கு தேவையான புரத சத்துக்களை அளித்து நிலத்தின் வளமையை அதிகரிப்பது இந்த உரத்தின் தன்னம, நிலத்தை வளமிக்கதாக மாற்றி பயிரிடும் பயிர்களையும் போஷக்குடன் வளர செய்து நல்ல பலனை அளிக்க செய்வதில் பெரும்பங்கு ஆற்றுவது மண்புழுக்கள். மண்புழுக்கள் நிலத்தை குடைந்து உள்ளே சென்று நுண்ணிய துளைகளை அமைக்கிறது. இதனால் மண்ணின் வளம் பெருகி தேவையான அளவு காற்று, நீர் மற்றும் பயிர்கள் வளர தேவையான சத்து பொட்களையும் சரியான விகிதத்தில் பெற வழி வகுக்கிறது.. மண்புழுக்கள் நீரின் ஊடுருவல் தன்மையை தன்மையை விருத்தி செய்கிறது. இந்த புழுக்கள் சுரங்கங்கள் போல் அமைத்து ஊடுருவதால் நிலத்திற்கு தேவையான நீரை உறிஞ்சும் தன்மையும் அதிகரிக்கிறது நிலத்திற்கு தேவையான தாது மற்றும் சத்து பொருட்கனையும் கிடைக்க வழிவகுக்கிறது நிலத்தின் பிஎச் அளவையும் நடுநிலையின் வைக்கிறது மண்புழு உரமானது ,நிலம் பிஎச் அளவில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருந்தாலும் இந்த உரம் பிஎச் (7) அளவை நடுநிலையிலேயே வைக்கிறது. இலை, தழை மற்றும் தாவரங்களின் சக்கைகளை மண்புழுக்கள் உரமாக மாற்றுகிறது. மண்புழுக்கள் நுண்கிருமிகளின் வளர்ச்சியை தூண்டுகிறது நைட்ரஜன் வாயுக்களை பெருக்கும் பாக்டீரியாக்கள், மண்புழுக்கள் நிலத்தில் ஏற்படுத்தும் பொந்துக்களின் பக்கங்களில் நிறைந்து காணப்படுகிறது.

Sign the GHG agreement and take the Voucher payment

ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்

## டிஐஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஐஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஐஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஐஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஐஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஐஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஐஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஐஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்கும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.